**சுங்க திணைக்களத்தின் சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் சுங்க தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுங்க திணைக்களத்தின் சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் சுங்க தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய தகவல் தொழில்நுட்ப கட்டண வருமானம் ரூபா 1,248,000 நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாதாந்தம் கிடைக்க வேண்டிய தொகை தொகை ரூபா 1,248,000 ஆக இருந்ததுடன் வருடாந்தம் அவ்வாறான 12 தவணைகளில் தொகையான ரூபா 14,976,000 கணக்கில் சரியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய வருமானம் சரியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு தகவல் தொழில் நுட்ப கட்டண நிதியம் ரூபா 8,736,000 ஆன பொறுப்புக்கள் ரூபா 7,488,000 ஆக காண்பிக்கப்பட்டதனால் அது ரூபா 1,248,000 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய அட்டுறு கட்டணமாண ரூபா 2,496,000 உடன் ஆரம்ப மீதியான ரூபா 4,992,000 தொகையில் கூட்டு மொத்தமான ரூபா 7,488,000 ஆகும். அதன் பிரகாரம் உரிய பெறுமதி சரியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் சரியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| மீளாய்வாண்டின் போது மேலதிக நேரம் ரூபா 862,061,573 தொகையும், கப்பல் பொருட் பரிசோதனைக் கட்டணம் ரூபா 121,696,955 தொகையும் தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு கட்டணம் ரூபா 11,980,800 தொகையும் ஆக கூட்டுமொத்தம் ஆக ரூபா 995,739,328 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த செலவினங்களை உறுதிப்படுத்தும் சான்றுகள் ஆன ஊழியர் அறிக்கை சேவை சான்றுகள் ஆன சேவைக்கு அறிக்கை இடப்பட்டமையை உறுதிப்படுத்துகின்ற கைவிரல் அடையாள இயந்தரி குறிப்பு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 995,739,328 | கைவிரல் அடையாள இயந்திர குறிப்பு அறிக்கை | அரச நிருவாக சுற்றறிக்கை 09/2009 இன் பிரகாரம் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லுகை, கைவிரல் அடையாள குறிப்பிடும் இயந்திரம் பயன்படுத்தவதன் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சுங்க திணைக்களத்தின் பணிப்பொறுப்பின் தன்மையின் பிரகாரம் அதனை அமுல்படுத்துதல் நடைமுறையில் கஸ்டமாக இருந்தது. அதனால் தான் திணைக்கள செயலத்தின் வருகை மற்றும் வெளிச்செல்லுகை பதிவதற்காக 18 படிவத்தின் படி முறையான பிரகாரம் பேணிச் செல்லப்படுவதுடன் விடுமுறை பதிவேடு மற்றும் சுங்க தனிப்பட்ட முறையான பதிவேடு ஒன்று பேணிச்செல்லப்படுகின்றதுடன் அதற்காக நிறைவேற்று தர உத்தியோகத்தர்களினால் அங்கீகாரம் வழங்குதல் மற்றும் ஒரு சரியான உறுதிப்படுத்தல் மேற்கொண்ட பின்னர் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது என்றமையால் கணக்காய்வு அபிப்பிராயத்துடன் இணங்கவில்லை. | அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய பணம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேலதிக நேர நிதியத்தில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 67,546,519 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய | கிடைக்கப் பெறாதுள்ள மீதிகளை அறவிடுவதற்காக அந்த பணத்தை செலுத்துமாறு அறிவித்து உரிய நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் கடிதம் விநியோகித்தல், | நிலுவைக் கடன்பட்டோர் மீதியை அறவிடும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். |

| | |
|---|---|
| கடன்பட்டோர் மீதி ரூபா 260,180 தொகையும், 01 முதல் 04 வருடங்கள் வரை பழைய கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 5,127,283 ஆகவும் இருந்தது. இதனிடையே ரூபா 1 மில்லியன் முதல் ரூபா 1.8 மில்லியன் வரை 05 விமான கம்பனிகளும், கப்பல் கம்பனி / 09 குதம்களும் இருந்தது. அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை பணத்தை செலுத்தும் வரை பதிவு இலக்கத்தை விநியோகித்தலை நிறுத்துதல், நிலுவைப் பணம் செலுத்தும் வரை வருடாந்த பிணைமுறி நாளதுவரையாக்காமை போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய இலக்கம் 17/1520 என்ற இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி | பொருட்கள் பரிசோதனைக் கட்டணக் கணக்கில் இருந்து சுங்க உத்தியோகத்தர்களுக்கு செலுத்துவதற்காக நிதி அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்படுகின்ற நடைமுறைக்கு முரணாக இருந்த போதிலும் அவ்வாறான பணி நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | மேலும் கோவைகளை பரிசோதனை செய்த பின்னர் இது தொடர்பாக கண்டறியப்படுமென குறிப்பிடுகின்றோம். | அதி விசேட வர்த்தமானிக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |
| (ஆ) | 2013 மார்ச் 01 ஆந் திகதிய 855 ஆம் இலக்க திணைக்கள கட்டளை மற்றும் 2018 ஒக்டோபர் 01 ஆந் திகதிய இலக்கம் 1274 என்ற திணைக்கள கட்டளை | கட்டளை இலக்கம் 855 மூலம் 2004 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட மணித்தியாலம் ஒன்றின் மேலதிக நேர வீதம் 45 சதவீதத்தால் அதிகரிப்பதற்கும் 2018 ஆம் ஆண்டின் போதும் கட்டளை இலக்கம் 1274 மூலம் முன்னால் செலுத்தப்பட்ட மணித்தியால மேலதிக நேர வீதம் 50 சதவீதத்தால் அதிகரிப்பதற்கும் மேலதிக நேர குழுவின் இறுதி பரிந்துரையின் கீழ் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த இரண்டு கட்டளைகளுக்காக மேலதிக நேர குழுவின் இறுதி பரிந்துரை கிடைத்தமைக்கு அல்லது நிதியமைச்சின் அங்கீகாரம் கிடைத்தமையோ கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட வில்லை. | சுங்க திணைக்களத்தின் மூலம் சேகரிக்கப்படுகின்ற தற்போது காணப்படுகின்ற கட்டணம், அறவிடல் மற்றும் மேலதிக அளவு (வீதம்) திருத்துவதற்கான கட்டிடம் மற்றும் அறவிடல் உப குழு மற்றும் மேலதிக நேர குழுவின் பரிந்துரையின் பிரகாரம் வர்த்தமானி பத்திரம் தயாரித்து நிதியமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதி அமைச்சினதும் மேலதிக நேர குழுவினதும் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் 123,832,043 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 181,029,338 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 57,197,295 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு மேலதிக நேர செலுத்துதல் ரூபா 76,811,047 குறைவடைந்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1967 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 65 நிறுவனங்களினால் இலங்கை சுங்கத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 220,418 தொகை பொதுவான சேமிப்பு வைப்புக் கணக்குகளில் இடுவதன் மூலம் கடந்த ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 13,062,659 வட்டித் தொகை உழைக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஆண்டின் இறுதி திகதியில் முதலீட்டுக் கணக்கின் மொத்த பெறுமதி ரூபா 13,283,077 ஆகும். எனினும் மீளாய்வாண்டின் போது அந்த நிறுவனங்களின் இருப்பு தொடர்ந்தும் சேவை வழங்குதல், திணைக்களத்துடன் உள்ள கடப்பாடு போன்றவை தொடர்பாக எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளாமல் உரிய மீதி கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | இதில் குறிப்பிடப்பட்ட 65 நிறுவனங்களுக்கு உரிய பணம் சுங்க திணைக்களத்தின் பெயரில் வைப்பாக காணப்படாது இருந்ததுடன் அந்தந்த நிறுவனங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பாதுகாப்பாக உரிய கணக்கு புத்தகங்களில் சுங்க திணைக்களத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது. எனினும் தவறுதலாக உரிய 65 வங்கி கணக்குகளின் மீதிகள் (வட்டியுடன்) சுங்க திணைக்கள கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ள தவறான கணக்கீடு செய்தல் மீளாய்வாண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. | தொடர்ந்தும் சேவைகளை வழங்குதல் தொடர்பாக விசாரனை மேற்கொண்டு உரிய மீதிகளை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் இருந்து மேலதிக நேர நிதியத்தின் வருமானத்தை விஞ்சிய செலவினங்கள் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பற்றாக்குறை வருடாந்தம் சீராக அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் கடந்த 05 வருடகால சுங்க வருமான எல்லையினை விஞ்சிய மொத்த செலவினம் ரூபா 638,933,884 ஆக | அவ்வப்போது விநியோகிக்கப்பட்ட அரசசாங்க கொள்கைகளுக்கு இணங்க 2007.10.26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க அதி விசேட வரித்தமானி மற்றும் அதன் திருத்தங்களின் பிரகாரம் நாளது வரையாக்கப்படாத கட்டண அளவு அறவிடப்பட்டதன் காரணமாக சேகரிக்கப்பட்ட மேலதிக நேர கட்டணம் குறைவடைந்திருந்தது. மேலதிக நேரம், கப்பல் பொருள் | சேகரிக்கப்பட்ட மேலதிக நேர வருமானத்தை விஞ்சி கொடுப்பனவுகள் செய்யாது இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன் வருமானத்தை விஞ்சிய செலவினத்தை தீர்த்து வைப்பதற்கு திரண்ட நிதியத்தை ஈடுபடுத்தியதன் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டில் இருந்து திரண்ட நிதியத்தின் மீதி சீராக வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 2,275,913,245 ஆக காணப்பட்ட திரண்ட நிதியத்தின் மீதி 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 1,636,979,362 வரை ரூபா 638,933,884 இனால் குறைவடைந்திருந்தது. சேகரிக்கப்பட்ட மேலதிக வருமாணத்தை விட கொடுப்பனவு செய்தல் இதற்கு காரணமாக இருந்த போதும் அதற்கு போதியளவான காரணத்தை கண்டறிதல் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனைக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் மற்றும் தொழில்நுட்ப தொடர்பு நிதியத்தின் கீழ் வருமானம் சேகரித்தல் தொடர்பாக மீண்டும் கவனத்தில் கொண்டு நாளது வரையாக்குவதற்காக கட்டணம் அறவிடும் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் எதிர்காலத்தில் மேற்கூறப்பட்ட வீதங்களை நாளதுவரையாக்கி மேலதிக நேர நிதியத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (இ) | உத்தியோகத்தர்களின் பொதுவான கடமைகளுக்கு புறம்பாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த என உறுதிப்படுத்தப்படாமல் சுங்க மேலதிக நேர நிதியத்தில் இருந்து 90 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டு முதல் 2023 வரையான காலத்தில் சேகரிக்கப்பட்ட மொத்த மேலதிக நேர வருமானம் ரூபா 2,516,116,911 இற்கு இடையே ரூபா 251,611,691 மாத்திரம் சிறிய அளவில் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படுகின்ற அளவு தொடர்பாக மீண்டும் மீளாய்வொன்று முகாமைத்துவத்தினால் மேற்கொள்ள வேண்டி இருந்தது. | மேலதிக நேரம் மற்றும் கப்பல் பொருள் கட்டணம் தொடர்பாக 2007.10.26 ஆந் திகதிய மற்றும் 1520/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி பத்திரத்தில் (4) 3 இன் பிரகாரம் மற்றும் சுங்க தகவல் மற்றும் தொழில் நுட்ப தொலைத் தொடர்பு நிதியத்தில் 2013.09.27 மற்றும் 1829/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி (3) 5 (அ) ஆன இன் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட பணம் மற்றும் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்படுகின்ற தொகைகள் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த நிதியத்தின் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்படுகின்ற அளவு தொடர்பாக மீண்டும் மீளாய்வொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | 2017 பெப்ரவரி 27 ஆந் திகதிய திணைக்கள கட்டளை இலக்கம் | அரச நிருவாக சுற்றறிக்கை 09/2009 இன் பிரகாரம் | வருகை / வெளிச்செல்கை |

| | | |
|---|---|---|
| 1140 இன் பிரகாரம் சுங்க கப்பல் பொருள் பரிசோதனைக் கட்டணம் பெற்றுக்கொள்வதற்கு உரித்துக்கு தாக்கமளித்தல் ஆக வார நாட்களில் முற்பகல் 06.00 மணிக்கு மற்றும் வார இறுதி நாட்களிலும் மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களில் முற்பகல் 09.00 மணிக்கு முன்னரும் சேவைக்கு அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் பரிசோதனைக் கட்டணத்திற்காக உரித்து இன்றி இருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இலங்கை சுங்கத்தின் பதவியணியினர் வருகை / வெளிச்செல்லல் காணப்படுகின்ற சுற்றறிக்கையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்படாமல் 2012 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 3,334,759,284 தொழில் நுட்பக் கட்டணமாக பரிசோதனைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்கள் வருகை மற்றும் வெளிச் செல்கை, மற்றும் கைவிரல் அடையாள குறிப்பு பதிவிடும் இயந்திரம் பயன்படுத்துவதன் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சுங்க திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்களின் பிரகாரம் அதனை அமுல்படுத்தல் நடைமுறையில் கஸ்டமாக இருந்தது. அதனால் இலங்கை சுங்க திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கையை பதிவதற்காக பொது 18 படிவத்தில் முறையான பிரகாரம் கையொப்ப பதிவேடு பேணிச் செல்லப்படுவதுடன் விடுமுறைப் பதிவேடு மற்றும் சுங்க மேலதிக நேரத்திற்காக தனியாக முறையான பதிவேடும் பேணிச் செல்லப்படுகின்றதுடன் அதற்காக பதவிநிலை உத்தியோகத்தர்களால் அங்கீகாரம் வழங்குதல் மற்றும் உரிய உறுதிப்படுத்தலின் பின்னர் மேலதிக நேர கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றதுடன் கணக்காய்வின் அபிப்பிராயத்துடன் இணங்கியிருக்கவில்லை. | உறுதிப்படுத்தி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதியத்திற்கு அறவிடப்பட்ட வருமானம் மேலதிக நேரம், கப்பல் பொருள் பரிசோதனை மற்றும் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக முறையே ரூபா 820,263,153 தொகை, ரூபா 243,393,910 மற்றும் ரூபா 14,976,000 ஆக காணப்பட்டது. அந்த பணிகளின் நடவடிக்கைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு மேலதிக வருமானத்தில் 105 சதவீதம் ஆக ரூபா 862,061,573 தொகையும், கப்பல் பொருள் 50 சதவீதம் ஆக ரூபா 121,696,955 தொகையயும் மற்றும் தகவல் தொழில்நுட்ப வருமானத்தில் 80 சதவீதமாக ரூபா 11,980,800 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட கொடுப்பனவு செயற்பாடுகளில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | மேலதிக நேர நிதியத்தின் கொடுப்பனவுகள் முறையான கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படாதிருந்தமை மேற்கூறப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இந்த நிலைமை இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த கணக்காய்வு அறிக்கைகளிலும் கூட்டிக் காட்டப்பட்டிருந்த விடயங்களும் பகுப்பாய்வு செய்து கொடுப்பனவு திட்ட முறைமையை மேலும் முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தற்போது மேலதிக நேர கொடுப்பனவு செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (ii) | 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் மேலதி நேர வருமானம் ரூபா 21,217,698 இனால் குறைவடைந்திருந்தது. மேலும் ஆண்டில் சேகரிக்கப்பட்ட மேலதிக நேர வருமானத்தை விஞ்சி ரூபா 41,798,420 மேலதிக நேர செலவினமாக உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | மேலதி நேர வருமானத்தை குறைப்பதற்கான காரணம் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் மேலதிக நேர செலவினம் ரூபா 76,811,047 இனால் குறைவடைந்துள்ள வருமானங்களை விட வேண்டும். | வருமானத்தை உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேலதி நேர நிதியத்தின் 2023 இன் வருமானமாக ரூபா 1,053,337,500 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் உழைக்கப்பட்ட உள்ளபடியான வருமானம் ரூபா 820,263,153 ஆனதன் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட உள்ளபடியான வருமானத்தில் 233,074,347 பாதகமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட வருமாணத்தின் சதவீதமாக 22 சதவீத வீழ்ச்சியாகும். இதற்கு பிரதான காரணமாக "கொழும்பு" உப தலைப்பின் கீழ் உள்ள வருமானம் ரூபா 173,625,308 மற்றும் "இறக்குமதி" என்ற உப தலைப்பின் கீழான வருமானம் ரூபா 26,570,200 இனால் குறைவடைந்தமை தாக்கமளித்திருந்தது. அதன் பிரகாரம் மேலதிக நேர நிதியத்தில் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 3,750 மிகை வருமானம் ஒன்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் விளைவாக ரூபா 123,832,043 பற்றாக்குறையே கிடைத்திருந்தது. | நாளது வரையாக்கப்படாத கட்டண அளவு அறவிடப்பட்டதன் காரணமாக சேகரிக்கப்பட்ட மேலதிக நேர கட்டணம் குறைவடைந்துள்ளது. இது தொடர்பாக மீண்டும் கவனத்தில் கொண்டு நாளது வரையாக்குவதற்காக கட்டணம் அறவிடும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன். அந்தக் குழுவொன்று பரிந்துரையின் அடிப்படையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வீதத்தை நாளது வரையாக்கி மேலதிக நிதியத்தின் வருமானத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பாதீட்டினை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்துதல் வேண்டும். |